[2010 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளகோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கருத்தில் கொண்டு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் இப்பொழுது பெரிய மாநகரமாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. பாத்திமா கல்லூரியையும், மதுரை மாநகரையும் இணைக்கின்ற வகையிலே சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட பாலம்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்பொழுது போக்குவரத்து நெருக்கடியைக் கருத்தில்கொண்டு அந்தப் பாலத்தை இரட்டைப் பாலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுதுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அது குறித்து அரசு பரிசீலித்து, தேவைப்படுமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***106089—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 5]

(அ) விழுப்புரம் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். 10 இலட்சம் மக்களுக்கும் அதிகமாக வசிக்கிற மாவட்டம். கிட்டத்தட்ட அங்கு 5 இலட்சம் இளைஞர்கள் படித்து வேலையில்லாமல் இன்றைக்கு சென்னைக்கும், பெங்களூருவுக்கும் போய் பிழைப்பு நடத்துகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களில் உருவாக்கித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் இரண்டு வகையாக உள்ளன. ஒன்று, தனியார் உருவாக்கும் பூங்காக்கள், மற்றொன்று, அரசு உருவாக்கும் பூங்காக்கள். நமது முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று, கடந்த நான்கு வருடங்களில் சென்னை உட்பட 8 மாவட்டங்களில் நிலத்தைக் கையகப்படுத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி இதுவரை நமது கழக அரசு ரூபாய் 715 கோடி முதலீடு செய்துள்ளது. இத்தகைய மாபெரும் திட்டத்தை, இவ்வளவு அதிக முதலீட்டை இந்தியாவிலேயே வேறு எந்த மாநில அரசும் செய்யவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

எதிர்காலத்தில் தேவை இருப்பின் மற்ற மாவட்டங்களுக்கும் நமது முதல்வர் அவர்களின் ஆலோசனையை ஏற்று இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

[2010 ஏப்ரல் 5

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழகத்தில் எத்தனை தொழில் நுட்பப் பூங்காக்கள் அரசின் சார்பிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அதிலே உள்ளூர் பகுதி மக்களுக்கு எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன; வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இதிலே வேலைக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்; அங்கே இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் சென்னை உட்பட எட்டு மாவட்டங்களில், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சி, கிருஷ்ணகிரி (ஓசூர்), சேலம், வேலூர், மதுரை ஆகிய எட்டு மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்கப்பட்டு, வருகின்ற இரண்டு வருடங்களில் மொத்தம் தமிழகம் முழுவதும் குறைந்தபட்சம் நான்கு இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் எங்களைச் சேரும் என்ற அளவிற்கு, நினைத்ததை மட்டும் முடிக்காமல், கனவில் காண்பதையும், கற்பனையையும் நிஜமாக்கிக் கொண்டிருக்கிற, இந்தியாவிற்கு வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கிற முதல்வர் அவர்களை வணங்கி, எனக்கு முதல் நாள் முதல் கேள்வி, இந்த அவையில் முதல் கேள்வி. கற்பனைகளுக்கு எல்லாம் எட்டாத அளவிற்குக் கலை நயத்தோடு இந்த அரங்கத்தை அமைத்திருக்கிற முதல்வர், துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2010 ஏப்ரல் 5]

என்னுடைய தொகுதி விவசாயிகள் நிரம்பிய தொகுதி. அங்கே தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைத்தால்——அந்த மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே கிட்டத்தட்ட 12-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பினைக் கொடுப்பது போன்ற ஒரு நல்ல உணர்வும்——என்னுடைய தொகுதியிலே படித்திருக்கின்ற இளைஞர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு கொடுக்கின்ற அளவிலே இருக்கும். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தகவல் தொழில்நுட்பப் பூங்காவினை பேரளூரிலே அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினரின் தொகுதி, பாதி திருவண்ணாமலையிலும், பாதி வேலூரிலும் இருப்பதாக நான் அறிந்துகொண்டேன். வேலூரில் நாங்கள் இடத்தைத் தேர்வு செய்வதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறோம். வேலூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டவுடன் அவர் தொகுதி மக்கள் அந்தப் பூங்காக்களின் வாயிலாகப் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய வேண்டுகோளை ஏற்று, மதுரையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமையும் என்று இதே அவையில் அறிவித்தார்கள். அதையொட்டி எப்போது அடிக்கல் நாட்டப்படும் என்று ஒரு முறை கேட்டேன். கல் தயாரானவுடன் நாட்டப்படும் என்று கூறினார்கள். அவர்களே வந்து அடிக்கல் நாட்டினார்கள். பிறகு பூங்கா எந்த நிலையில் இருக்கிறது என்று கேட்டேன். அரும்பு நிலையில் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். எப்போது மலரும், மதுரை மக்கள் எப்போது அந்த மணத்தை நுகர இயலும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: வெகு விரைவில் மதுரை மக்கள் அந்தக் கனியை ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்திற்குள் அனுபவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

பால் குளிரூட்டும் நிலையங்கள்

***107308—திரு. பெ. மோகன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம், கயத்தார், கழுகுமலை மற்றும் புதியம்புத்தூர் ஆகிய கிராமங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள ஒட்டப்பிடாரம், கயத்தார், கழுகுமலை மற்றும் புதியம்புத்தூர் ஆகிய கிராமங்களில் போதிய பால் உற்பத்தி இல்லாததால், தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி. வேறு எதுவும் தொழில் இல்லை. இங்குள்ள மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். விவசாயப் பணிகள் முடிந்தவுடன் வேறு வேலை இல்லாமல் சும்மாதான் இருக்கிறார்கள். ஆகவே பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைகின்றபோது விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் பசுக்களை வளர்த்து பால் உற்பத்தியை உயர்த்துவதற்கு ஏதுவாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS